# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

### (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

<table>
<tr><th>மாமன்ற கூட்ட தேதி</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள்</th><th>மாமன்ற தீர்மானம்</th></tr>
<tr><td>04-01-10</td><td>1</td><td>
இம்மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத்திட்டம் செயல்படுத்த, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்தினை கேட்டு கொண்டதின்படி இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 14 நாள் 10–04–2003இன் படி மெசர்ஸ் வில்பர் ஸ்மித் அசோசியேட்ஸ், சென்னை நிறுவனம் அவர்களை தொழில்நுட்ப ஆலோசகராக நியமனம் செய்து மேற்படி நிறுவனத்தால் தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மூலம் மேற்படி திட்டம் இறுதி செய்யப்பட்டு திட்டமானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு மேற்படி வாரியத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மூன்று பேக்கேஜ்களாக பணிகள் நடைபெற வருகிறது.
மேற்படி பாதாள சாக்கடை திட்டத்திற்கு முதலில் இறுதி செய்யப்பட்ட மொத்த மதிப்பீடு ரூ 46.40 கோடி எனவும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகள் ஆண்டொன்றுக்கு ரூ 91.00 இலட்சங்கள் எனவும் பின்வருமாறு திட்ட மதிப்பீட்டு படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்திடம் பெறப்படும் கடன் தொகையினை திரும்ப செலுத்த ஏதுவாக பாதாள சாக்கடை குழாய் இணைப்புதாரர்களிடம் வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் வசூல் செய்யவும் அதற்காக மேற்படி நிதி நிறுவனத்திடமிருந்து கடன் மற்றும் மான்யம் பெற ஒப்பந்தம் செய்ய ஆணையருக்கு அதிகாரம் அளித்தும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 373 நாள் 05–10–2005ன் படி ஒப்புதல் அளித்துள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிதி நிறுவன விபரம்</th><th>தொகை (ரூபாய் இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>மான்யம்</td><td>464.00</td></tr>
<tr><td>2</td><td>நகராட்சி மற்றும் பொது மக்கள் பங்கு தொகை</td><td>1574.39</td></tr>
<tr><td>3</td><td>தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் கடன்</td><td>2601.61</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>4640.00</td></tr>
</table>
வைப்பு தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் விபரம்
<table>
<tr><th>வ.எண்</th><th>உபயோகத்தின் தன்மை</th><th>வைப்புத் தொகை</th><th>மாதாந்திர கட்டணம்</th></tr>
<tr><td>1</td><td>வீட்டு உபயோகம்</td><td>ரூ. 3000.00</td><td>ரூ. 60.00</td></tr>
<tr><td>2</td><td>வணிக உபயோகம்</td><td>ரூ. 7500.00</td><td>ரூ.150.00</td></tr>
<tr><td>3</td><td>தொழிற்சாலை உபயோகம்</td><td>ரூ.10000.00</td><td>ரூ.200.00</td></tr>
</table>
இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்திடமிருந்து ரூ 68.62 கோடி மதிப்பீட்டில் திருத்திய திட்ட மதிப்பீடு வரப்பெற்று அதன் அடிப்படையில் கடன் ஒப்பந்தப் பத்திரம் மற்றும் கடன் நிபந்தனை பத்திரம் ஆணையர் அவர்களால் ஒப்பம் செய்து அனுப்பி வைக்க பின்வரும் பட்டியலில் கண்டுள்ளபடி இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 273, நாள் 29–05–2008இன் படி அனுமதி அளித்துள்ளது.
</td><td>அலுவலகக் குறிப்பு 1 ஒப்புதல் அளிக்கப்பட்டது,<br>அலுவலகக் குறிப்பு 2 பதிவு செய்யப்பட்டது</td></tr>
</table>

| வ.எண் | நிதி விபரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தமிழ் நாடு வளர்ச்சி நிதியும் கடன் ( TNUDF loan) | ரூ. 2446.74 |
| 2 | நகராட்சி IDC Contribution தொகை | ரூ. 103.98 |
| 3 | தமிழ் நாடு அரசு மானியம் | ரூ.1000.00 |
| 4 | பொது மக்கள் பஙகு தொகை | ரூ.2362.98 |
| 5 | நகராட்சி பஙகு தொகை | ரூ. 948.54 |
| | மொத்தம் | ரூ.6862.25 |

அ) தற்போது மேற்படி திட்டத்தின் தொழில்நுட்ப ஆய்வு குழுவினரால் பாதாள சாக்கடை திட்டத்திற்கு நகர்ப் பகுதியில் கட்டப்படவுள்ள கழிவு நீர் சுத்திரிப்பு நிலையம் WSP முறையில் இருந்து ASP முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்ட கூடுதல் செலவினத்தால் மொத்த மதிப்பீடு தொகை ரூ 68.62 கோடியில் இருந்து ரூ 80.00 கோடியாக உயர்ந்துள்ளது என நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (பாதாள கழிவு நீர் திட்ட கோட்டம்) தூத்துக்குடி அவர்களின் கடிதம் எண் 8809/கோ.பா.சா.தி/இ.வ.அ./2009 நாள் 10.08.2009ல் தெரிவிதுள்ளார்கள்.

ஆ) நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழஙகல் (நநி3) துறை அரசாணை (2ப) எண் 79 நாள் 14–08–09இல் மேற்படி பாதாள சாக்கடை திட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் III இன் நிதி ஆதாரம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதால் திட்ட மதிப்பீட்டில் 30% மானியம் அல்லது ரூ 10 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டதென்றும் இவற்றில் தோன்றுகின்ற வித்தியாச தொகைக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிதியை (O & M) Gap Fund) கட்டுமானத்திற்கு பின் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கு, உள்ளாட்சி அமைப்புகள் உரிய மானியத் தொகையை மூலதன வேலைகளுக்கு ஒப்பளிப்பு செய்ய கோருவதால், கட்டுமான காலத்தின் போது வைப்புத் தொகையை திரட்டுவதற்கு உள்ளாட்சி அமைப்புகள் சிரமப்படுவதாலும், மேற்கூறியவற்றை ஒரு பொருளாக ஆறாவது மாநில அளவிலான திட்ட அஙகீகரிப்பு கூட்டத்தில் வைக்கப்பட்டு பின் வரும் பட்டியலில் கண்டுள்ள படி நிதி கடன் தொகையில் ரூ 10.00 கோடி மானியம் வழஙகி திருத்திய நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிட்டுள்ளது.

| வ.எண் | நகராட்சியின் பெயர் | நிதிநிறுவனகடன் (ரூபாய் இலட்சத்தில்) | மானியம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 2601.61 | 1000.00 |

எனவே மேற்படி திட்டத்திற்கு ரூ 10.00 கோடி மானியம் அளித்து திருத்திய நிர்வாக அனுமதி அளித்து வெளியிடப்பட்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

இ) தற்போது தமிழ்நாடு நகர்ப்புற நிதி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற தித்திய திட்ட மதிப்பீடு ரூ. 80.00 கோடிக்கு பின்வரும் பட்டியலில் கண்டுள்ள நிதி ஆதார விபரப்படி பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

| வ.எண். | நிதி விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | பொது மக்கள் பங்கு தொகை | 238451400 |
| 2 | நிதி நிறுவன மானியம் | 100000000 |
| 3 | கூடுதலாக தேவைப்படும் நிதி ஆதாரம் | 216874600 |
| 4 | தமிழ்நாடு வளர்ச்சி நிதியும் கடன் (TNUDF Loan) | 244674000 |
| 5 | நகராட்சி IDC Component தொகை | 2826045 |
| | Project Cost Including IDC | 828216045 |

ஈ) மேற்படி பாதாள சாக்கடை திட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி நிறுவனம் பரிந்துரையின் படியும், மாமன்ற தீர்மானம் எண் 101, நாள் 29–05–2009இன் மேற்படி திட்டத்தின் துணை விதிகள் ஒப்புதல் செய்யப்படுள்ள படி பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு பொதுமக்கள் மற்றும் இணைப்புதாரரர்களிடம் வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் வசூல் செய்ய மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

வைப்புதொகை மற்றும் மாதாந்திர கட்டணம் விபரம்

| வ.எண். | கட்டிடத்தின் தன்மை (குடித்தன விகிதம்) | வைப்புத் தொகை | மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| 1 | 500 சதுர அடிக்குட்பட்டது | ரூ 4000.00 | ரூ 75.00 |
| 2 | 501 முதல் 1200 சதுர அடி வரை | ரூ.5000.00 | ரூ.90.00 |
| 3 | 1201 முதல் 2400 சதுர அடி வரை | ரூ.6000.00 | ரூ.110.00 |
| 4 | 2400 சதுர அடிக்கு மேல் | ரூ.7000.00 | ரூ.130.00 |

| வ.எண். | கட்டிடத்தின் தன்மை (குடித்தனமற்ற விகிதம்) | வைப்புத் தொகை | மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| 1 | 500 சதுர அடிக்குட்பட்டது | ரூ 8000.00 | ரூ 140.00 |
| 2 | 501 முதல் 1200 சதுர அடி வரை | ரூ.15000.00 | ரூ.160.00 |
| 3 | 1201 முதல் 2400 சதுர அடி வரை | ரூ.18000.00 | ரூ.220.00 |
| 4 | 2400 சதுர அடிக்கு மேல் | ரூ.35000.00 | ரூ.300.00 |

**அலுவலகக் குறிப்பு 1)** அ.இ.ஈ. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
2) ஆ மன்றம் பதிவு செய்யலாம்.

இ3/11512/07

---

2

இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் சார்பாக, தற்பொழுது உள்ள மழைக்காலத்தை முன்னிட்டும் கொசுக்களால் பரவும் நோய்களை தடுக்கும் பொருட்டும் 09–11–2009 முதல் 31–01–2010 வரையிலான காலங்களுக்கு கொசுக்களை கட்டுப்படுத்தும் வேதி புகை மருந்து தெளிக்க தேவைப்படும் பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றை முறையே 250லிட்டர் மற்றும் 2100 லிட்டர் அவசர அவசியம் கருதி வாங்க மாமன்ற முன் அனுமதியும் அதற்கான தோராயமான செலவு தொகை ரூ 90,000/–(ரூபாய் தொண்ணூறாயிரம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு 1.** அனுமதிக்கலாம்
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

எச்4/10463/09

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது

---

3

இம்மாநகராட்சி சண்முகபுரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு வி. மணி வயது முதிர்வின் காரணமாக 31–5–2009ல் ஓய்வு பெற்றுள்ளார். அன்னார் தமது பணிக்காலத்தில் நகராட்சி மூலம் அவரது ஊதியத்தில பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ 2640/– அதற்கான வட்டித்தொகை ரூ 1572/– மற்றும் அதற்கு அரசு பங்குத்தொகை ரூ 5000/–ஐ வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக் குறிப்பு** – திரு வி. மணி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருக்கு மொத்தம் 9212/–ஐ கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>சி1/17849/09 | |
| | 4 | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதி போல்பேட்டை S.K.S.R. காலனி பகுதியிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவிலுள்ள ஆக்கிரமிப்பினை அகற்றியது தொடர்பாக வாதி திருமதி ஆறுமுககனி என்பவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ரிட் மனு எண்.4503/09ல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி மீண்டும் வாதி தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்களை 5வது பிரதிவாதியாக குறிப்பிட்டு POP NO. 256/09 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் மாமன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம். எப்1.3474/2009 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 5 | இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் 2009–2010ம் ஆண்டுக்கு பொன்விழா ஆண்டு நகர்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 517518/–க்கு உத்தேச ஒதுக்கீடு செய்யப்பட்டு செய்யப்பட வேண்டிய பணிகள் விபரம் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. 2008–2009ம் நிதியாண்டில் பொன்விழா ஆண்டு நகர்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 3.42 லட்சம் கூடுதலாக பூபாலராயர்புரம் பாலம் முதல் வடக்கு எல்லை வரை வடிகால் கட்டும் பணிக்கு செலவு செய்யப்பட்டு பொது நிதியிலிருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது. எனவே இத்தொகையினை 2009–2010ம் ஆண்டு நிதியில் ஈடு செய்துவிட்டு மீதமுள்ள தொகை ரூ 175518/–க்கு பணிகள் செயல்படுத்தப்பட வேண்டும்.<br>எனவே 2009–2010ம் ஆண்டுக்கு போல்பேட்டை கிழக்கு தெருவில் வாறுகால் கட்டுவதற்கு ரூ 2.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்யவும் கூடுதல் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செய்யலாம். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**குறிப்பு–** பதிவு செய்யலாம்.<br>இ1/17135/2009 | அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது |
| | 6 | இம்மாநகராட்சி அர்பன் மலேரியா பணியாளர் திரு கோ. அய்யாச்சாமி என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் தொகை ரூ 10000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. அன்னார் இம்மாநகராட்சி பணியாளராக 32 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றார். இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ 10000/–ஐ மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் திருமணக்கடன் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.19384/09/பி | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 7 | இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் தற்போது e-tendering முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது ஒப்பந்தப்புள்ளிகள் e-tendering முறையில்தான் பெறப்படுகிறது. E-tendering மூலம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கும் அதிகாரம் வழஙகப்பட்டுள்ள நிர்வாக பொறியாளர்அவர்களின் கணிணிக்கு Wireless neting இணைப்பு மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. BSNL நிறுவனத்தில் Wireless net இணைப்பு வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான முன் அமைப்பு கட்டணம் ரூ **4400/–** (திரும்ப பெறப்படாதது) மற்றும் மாதாந்திர கட்டணம் ரூ.**900/–** வீதம் பொது நிதியிலிருந்து செலுத்தவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**குறிப்பு** – அனுமதிக்கலாம். | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இ1/16426/2009 | |
| | 8 | தூத்துக்குடி மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31–03–2009ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு எம். கனகராஜ் என்பவருக்கு அவர் பணிபுரிந்த காலத்தில் அன்னாரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி தொகை அதற்குரிய வட்டி மற்றும் மான்யத் தொகை கீழ்க்கண்ட விபரப்படி அன்னாருக்கு வழஙகப்பட வேண்டியது உள்ளது.<br><br>1) சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை பிடித்தம் 01–03–1986 முதல் 30–06–1998 முடிய மாதம் ரூ 20/– வீதம் 148 மாதஙகள் ரூ 2960/–<br>2) அதற்குரிய வட்டித்தொகை 01–03–1986 முதல் 31–03–2009 வரை ரூ.10095/–<br>3) சிறப்பு சேமநலநிதி மான்யம் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகு துறை (ந.ப.3)துறை அரசாணை (பத்தாண்டு) எண் 340 நாள் 08–08–2008ன்படி ரூ. 10000/–<br>---------<br>ஆக மொத்தம் ரூ. 23055/–<br>---------<br><br>மேற்கண்ட தொகை ரூ 23055/–ஐ (ரூபாய் இருபத்தி மூன்றாயிரத்து ஐம்பத்தி ஐந்து மட்டும்) அன்னாருக்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>சி2/6902/2009 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 9 | தூத்துக்குடி மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30–04–2009ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு ஆர். சண்முகம் என்பவருக்கு அவர் பணிபுரிந்த காலத்தில் அன்னாரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி தொகை அதற்குரிய வட்டி மற்றும் மான்யத் தொகை கீழ்க்கண்ட விபரப்படி அன்னாருக்கு வழஙகப்பட வேண்டியது உள்ளது.<br><br>1) சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை பிடித்தம் 01–03–1986 முதல் 30–06–1998 முடிய மாதம் ரூ 20/– வீதம் 148 மாதஙகள் ரூ 2960/–<br>2) அதற்குரிய வட்டித்தொகை 01–03–1986 முதல் 30–04–2009 வரை ரூ.10178/–<br>3) சிறப்பு சேமநலநிதி மான்யம் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகு துறை (ந.ப.3)துறை அரசாணை (பத்தாண்டு) எண் 340 நாள் 08–08–2008ன்படி ரூ. 10000/–<br>---------<br>ஆக மொத்தம் ரூ. 23138/–<br>---------<br><br>மேற்கண்ட தொகை ரூ 23128/–ஐ (ரூபாய் இருபத்தி மூன்றாயிரத்து நூற்றி முப்பத்தெட்டு மட்டும்)அன்னாருக்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>சி2/6897/2009 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10 | பக்கிள் கால்வாய் தூர் வாறுதல் மற்றும் ஆர்.சி.சி. சுவர் தளம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் செயல்முறை எண்.110 நாள் 01–08–2008.<br><br>இம்மாநகராட்சி பக்கிள் கால்வாய் படுகைகள் முழுமையும் தூர் வாறுதல், கால்வாய் ஒட்டியுள்ள காடுகளை சுத்தப்படுத்துதல் 4.80 கி.மீ. முதல் 6.60 கி.மீ.வரை கால்வாய் வரப்புகளில் ஆர்.சி.சி அமைத்தல் பணிக்கு ரூ 698.30 இலட்சத்திற்கு நிர்வாக | அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை 2008–2009ம் ஆண்டு பொதுப்பணித்துறை விலை விகிதப்பட்டியலின்படி ரூ 542.00 இலட்சத்திற்கு ம.ப.எண்.44/2008–2009 ல் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட பணிக்கு 17–10–2008ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 03–12–2008ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பணி நடைபெற்று வருகின்றது. மேலும் 22–10–09ல் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் மேற்படி பணியினை நேரடி ஆய்வு செய்ததில் திரேஸ்புரம் பாலம் முதல் முடிவு வரை Wearing coat finishing பணி செய்யும்படி தெரிவிக்கப்பட்டது. ஆனால் Wearing coat அமைப்பதற்கு பிரதான மதிப்பீடு ரூ 542.00 இலட்சத்தில் Provision இல்லை. எனவே மேற்கண்ட பணி தனியாக செய்ய வேண்டியுள்ளது.<br><br>மேலும் இப்பணியினை செய்திட அரசு அனுமதித்த ரூ 698.30 இலட்சத்தில் மீதம் உள்ளது. எனவே மீதமுள்ள தொகையில் தனியாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 24.90 இலட்சத்தினை அனுமதிக்கலாம்.<br><br>மேற்கண்ட பணிக்கு அவசர அவசியம் கருதி 18–11–2009ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பட்டன. அவை இரண்டும் மதிப்பீடு தொகையைவிட அதிகமாக உள்ளது. ஒப்பந்ததாரர் திரு. எஸ்.ரம்போலா 6.05% அதிகம் மற்றும் திரு எஸ். சுதர்சன் 4.93% அதிகமாக கொடுத்துள்ளார். எனவே பொறியாளர் அவர்கள் விலை குறைப்பு (Negosiation) கோரியதில் ஒப்பந்ததாரர் திரு எஸ்.சுதர்சன் குறைத்து கொடுத்துள்ளார்.<br><br>1) திரு எஸ். ரம்போலா மதிப்பீடு தொகையைவிட 6.05% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br>2) திரு எஸ்.சுதர்சன் மதிப்பீடு தொகையைவிட 0.01% குறைவு டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.01% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும்<br>மதிப்பீடு தொகை ரூ 24.90 லட்சம் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.சுதர்சன் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண்.106/09–10 | |
| | 11 | தூத்துக்குடி மாநகராட்சி முத்துக்கிருஷ்ணாபுரம் 6ம் தெருவில் கதவு எண். 81எப் 2ல் குடியிருந்து வரும் திரு டி. செந்தூர்பாண்டியன் மற்றும் ஞானசெல்வம் என்பவர்கள் தனது வீட்டின் சுற்று சுவர் நகராட்சி சாலையில் அமைகிறது என தெரிவித்ததின் பேரிலும் மாநகராட்சியிலிருந்து எப்போதும் தொந்தரவு செய்ய கூடாதென்றும் மேற்படி இடத்தை அளக்க கூடாதென்றும் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். ஓ.எஸ்.386/09ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பாக நீதிமன்றத்தில ஆஜராகவும் இதற்கான கட்டணம் மற்றும் வழக்கிற்கான உத்தேசக் கட்டணம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்2/20593/09 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 12 | இம்மாநகராட்சியில் கணக்கராக பணியாற்றிய திரு.பி. பாஸ்கரன் என்பவர் 31–5–2006ல் ஓய்வு பெற்றுள்ளார். அன்னார் அதற்கு முன்பு பணியாற்றிய நாகர்கோவில் | அலுவலகக் குறிப்புப்படி |

<table>
<tr><td></td><td></td><td>நகராட்சியில் தணிக்கைத்தடை ஆட்சேபணையின்படி பிடித்தம் செய்யப்பட்ட தொகையை கேட்டு மதுரை உயா்நீதிமன்றத்தில W.P.NO. 11880/09 ல் வழக்கு தொடா்ந்துள்ளாா். மேற்படி வழக்கில் சென்னை, நகராட்சி நிா்வாக இயக்குநா் அவா்களை முதல் பிரதிவாதியாகவும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை 2வது பிரதிவாதியாகவும் நாகா்கோவில் நகராட்சி ஆணையரை 3வது பிரதிவாதியாகவும் குறிப்பிட்டுள்ளாா். மேற்படி வழக்கில் மாநகராட்சி சாா்பில் மாமன்ற வழக்கறிஞா் மதுரை உயா்நீதிமன்றம் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>சி1<br>/19733/09</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>13</td><td>கோடிஸ் இன்டஸ்டாியல் இன்ஜினியாிங நிறுவனத்திற்கு பிடித்தம் செய்யப்பட்ட 5% தொகையை ரூபாய் 24802/–ஐ திரும்ப வழஙக கேட்டுள்ளாா்கள். அந்நிறுவனத்திற்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூபாய் 24802/–ஐ காலஙகடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே அத்தொகை ரூபாய் 24800/–ஐ காலஙகடந்த வைப்பு நிதி கணக்கிலிருந்து அன்னாருக்கு வழஙக மாமன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.18361/09/பி3</td><td>அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>14</td><td>இம்மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுாியும் திருமதி. என். சோ்மக்கனி (தற்காலிக பணி நீக்கம்) என்பவா் எச்2 இருக்கையில் பணிபுாிந்த காலத்தில் தம் பணிகள் சாிவர மேற்கொள்ளாமலும் அலுவலக நடைமுறை விதிகள் கடைபிடிக்காமல் தன்னிச்சையாக செயல்பட்டமைக்காகவும் அன்னாரை தற்காலிக பணி நீக்கம் செய்து உத்திரவிடப்பட்டதை எதிா்த்து சென்னை உயா் நீதி மன்றம் மதுரை கிளையில் ாிட் மனு WP (MD) No 10468-09 வழக்கு தொடுத்துள்ளாா். எனவே இந்த வழக்கினை எதிா்த்து மாநகராட்சி சாா்பாக எதிா் வழக்காட திரு. கடற்கரை வழக்கறிஞரை நியமிக்கவும் அதற்கான செலவினஙகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.<br>எச்1.16953/09</td><td>அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>15</td><td>இம்மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள சொத்து வாிவிதிப்பாளா்களுக்கு அலுவலகம் மூலம் வழஙகப்படும் புதிய குடிநீா் குழாய் இணைப்புகள் நடைமுறையில் எளிதாக்கிட மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அரசாணை (நிலை) எண் 97 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழஙகல் துறை நாள் 12–07–07இல் தொிவிக்கப்பட்டபடி அரசாணைக்குப்பின் குடிநீா் இணைப்பு வழஙகும் நடைமுறை ஆராய்ந்ததில் நடைமுறைகள் ஒரே மாதிாியாக இல்லாமலும் வெவ்வேறு நடைமுறைகளை கடைபிடிப்பதாலும் புதிய குடிநீா் குழாய் இணைப்பு வழஙகுவதில் காலதாமதம் ஏற்படுகிறது.<br><br>எனவே மேற்படி காலதாமதத்தை தவிா்க்கும் பொருட்டு ஒரே மாதிாியான நடைமுறைகள் நகா்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்ற தொிவித்து வரப்பெற்ற ந.க.எண்.748/08/குவ2 நாள் 21–09–09ஆம் தேதிய நகராட்சி நிா்வாக இயக்குநா், சென்னை அவா்களின் சுற்றறிக்கையில் குழாய் வைப்புத் தொகை மற்றும் மேற்பாா்வை கட்டணம் (குடிநீா் துணை விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி) செலுத்திடவும், பின்வரும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்தவும் தொிவிக்கப்பட்டுள்ளது.<br><br><table><tr><th>வ.எண்.</th><th>மாநகராட்சிக்கு</th><th>கருஙகல்</th><th>தாா் சாலை</th><th>சிமெண்ட</th></tr><tr><td>1</td><td>0–30 மீட்டா்</td><td>1050/–</td><td>2250/–</td><td>2600/–</td></tr><tr><td>2</td><td>30–90 மீட்டா்</td><td>1650/–</td><td>2850/–</td><td>3200/–</td></tr></table></td><td>அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | நீளத்திற்கு | | | |

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் “அ” விண்ணப்பத்தில் மேற்கண்ட விபரப்படி விண்ணப்பதாரர்களுக்கு வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கிடவும் சம்பந்தப்பட்ட குழாய் இணைப்பு பதிவேடுகளில் உரிய பதிவுகள் மேற்கொண்டும் பெறப்படும் விண்ணப்பங்களின் முதுநிலைப் பட்டியல் இணையதளத்தில் வெளியிடவும் விண்ணப்பதாரர் புதிய குடிநீர் இணைப்புக்குரிய தேவையான குழாய்களை பதித்து விட்டு மாநகரப் பொறியாளரிடம் எழுத்து மூலம் தெரிவித்து விண்ணப்பதாரரின் முறையான தகவலுக்கு பின் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் முன்னிலையில் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க தெரிவிக்கப்பட்டு உள்ளது. மேலும் ஒவ்வொரு வருடம் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் (ஏப்ரல் 1ம் தேதி முதல்) விண்ணப்ப படிவம் எந்த நிதியாண்டில் வழங்கப்பட்டு தொகை செலுத்தப்படுகிறதோ அந்த நிதியாண்டிற்கான தொகை வசூலிக்கப்பட வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3 21358/09

16 இம்மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் 16 வார்டுகளில் துறை மூலம் 2374 விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதற்கான செலவினத்திற்கும் பொருட்கள் வாங்கிட ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மாமன்றம் தீர்மானம் எண் 150 நாள்31–08–2009ல் அனுமதி அளித்துள்ளது. 06–11–09ல் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்று இருப்பதால் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்தப்புள்ளிகள் (Price bill ) 13–11–09 தேதி திறக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வரப்பெற்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. | பொருள் | மெசர்ஸ் ஜோதி | மெசர்ஸ்.எஸ்.ஆர்.எஸ். |
|---|---|---|---|
| 1 | 250W சோ.ஆவி | 800 | 840 |
| 2 | 50W காப்பர் சோக் | 1100 | 1150 |
| 3 | 250 W S.V | 185 | 190 |
| 4 | 7/20 காப்பர் வயர் | 3150 | 3300 |
| 5 | 3/20 காப்பர் வயர் | 1475 | 1500 |
| 6 | 3/20 G.I. வயர் | 85 | 90 |
| 7 | 1/18 PVC | 620 | 630 |
| 8 | 2004 H.D. பியூஸ் | 760 | 780 |
| 9 | 604 பியூஸ் யூனிட் | 100 | 105 |
| 10 | 40W குழல் விளக்கு | 43 | 44 |
| 11 | 40W காப்பர் சோக் | 145 | 147 |
| 12 | 40W ஸ்டார்டர் | 9 | 10 |

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 12 | 40W ஸ்டார்டர் | 9 | 10 |
| 13 | 40W சைடு வோல்டர் | 8 | 9 |
| 14 | இன்சுலேசன் டேப் ரோல் | 9 | 10 |
| 15 | Street light சுவிட்ச் பாக்ஸ் | 790 | 800 |
| 16 | 101 - 32 கான்டாக்டர் | 1950 | 2000 |
| 17 | Dual timer | 2950 | 3000 |
| 18 | 604 MCB | 780 | 800 |
| 19 | T5 F24w பல்பு | 105 | 110 |
| 20 | ஆன், ஆப் டைமர் சுவிட்ச் | 6900 | 7000 |
| 21 | T5 Electronic choke | 270 | 272 |
| 22 | T5 Lam Holder | 9.50 | 10 |
| 23 | 400W Metl Holde Lamp | 1000 | 1050 |

**அலுவலகக் குறிப்பு**

1) வரப்பெற்ற இருநிறுவனத்தினர் டேவணித்தொகை செலுத்தி உள்ளனர்.
2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஜோதி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

ந.க.எண்.13706/இ3/2009

17

இம்மாநகராட்சிப் பகுதிக்கு உட்பட்ட 35 வார்டுகளில் 40W குழல் விளக்கு 4751, 250 W சோடியம் ஆவி விளக்கு 800, 150 W மெர்க்குரி ஆவி விளக்கு – 74 , உயர் மின் கோபுர விளக்கு – 2 என மொத்தம் 5627 தெரு விளக்குகள் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. பராமரிப்பு காலம் நிறைவடைந்ததை ஒட்டி செலவினங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் தனது தீமான எண் 150 நாள் 31–08–09ல் அனுமதி அளித்துள்ளது. மூன்று ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்ய 06–11–09ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் இரு நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று உள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி திறன் பெற்று இருப்பதால் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்தப்புள்ளி (Price bill ) 13-11-2009 தேதி திறக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் விவரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பொருள் | ஆண்டு ஒன்றுக்கு | |
|---|---|---|---|
| | | மெசர்ஸ் சுதா இஞ்னியரிங் | மெசர்ஸ் எஸ்தர் ஏஜென்சிஸ் எஸ்ஸார் |
| 1 | 40W குழல் விளக்கு | ரூ 297 | ரூ 315 |
| 2 | 250W சோடியம் ஆவி விளக்கு | ரூ.1497 | ரூ.1595 |
| 3 | 150W மெர்க்குரி ஆவி விளக்கு | ரூ.1297 | ரூ.1295 பழைய பொருட்களுக்கு 2சதவிகிதம் கழித்தல் |
| 4 | உயர் மின்கோபுர விளக்கு | ரூ.35727 | ரூ.45495 |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் சுதா இஞ்சினியரிங் நிறுவனத்திடம் Neogatiation கோரப்பட்டது. அதன் அடிப்படையில் சுதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருநெல்வேலி அவர்களிடமிருந்து வரப்பெற்ற Neogatiation கடிதம் நாள் 15–12–09 மன்றத்தின் பார்வைக்கு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் சுதா இன்ஜினியரிங் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் மூன்று ஆண்டுகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் முதலாம் ஆண்டிற்கு அனுமதிக்கவும், பணி திறனை பொறுத்து மாமன்ற அனுமதி பெற்று மற்ற இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | வைக்கப்படுகின்றது. பழைய பொருட்களும் கழித்து கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் கொடுத்துள்ளனர்.<br>40W குழல் விளக்கு ரூ **295** each<br>250W சோடியம் ஆவிவிளக்கு ரூ.**1487** each<br>உயர்மின் கோபுர மின் விளக்கு ரூ.35687 each<br>150W மெர்க்குரி ஆவி விளக்கு ரூ.**1287** each<br><br>**அலுவலகக் குறிப்பு –**<br>**1)** வரப்பெற்ற இரு நிறுவனத்தினரும் டேவணித்தொகை செலுத்தி உள்ளர்.<br>**2)** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தை விட குறைவாக உள்ளது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் சுதா இஞ்ஜினியரிங நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.<br>**3)** மூன்று ஆண்டுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் முதலாம் ஆண்டிற்கு அனுமதிக்கலாம். பணி திறனை பொருத்து மாமன்ற அனுமதி பெற்று மற்ற இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்துக்கொள்ளலாம்.<br>ந.க.எண். **13706/இ3/2009** | |
| | 18 | தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட **11**வது வார்டு பகுதியில் எஸ்.எஸ்.மாணிக்கபுரத்தில் புதிய தார்சாலை அமைக்க மாமன்றம் தீர்மான எண் **160** நாள் **31–08–09**ல் அனுமதி அளித்துள்ளது. இச்சாலையின் மத்தியில் போக்குவரத்திற்கு இடையூராக உள்ள மூன்று மின்கம்பங்கள் மாற்றி அமைக்கவும் செலவினத்திற்கும் மின் வாரியத்தின் மூலம் செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>நகஎண்.**9206/09/இ5** | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 19 | தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட மேலூர் ரயில்வே நிலையத்தை புதிய பேருந்து நிலையம் எதிரில் உழவர் சந்தைக்கு தெற்கில் மேற்படி மேலூர் ரயில்வே நிலையம் அமைப்பது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் ந.க.எண். இ3/44689/08 நாள் 14–12–2008ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பேரில், நகரளவு எண்கள் 4127, 4128, 4153, 4160, ஆகியவற்றில் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட 3400 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தினை இரயில்வே நிறுவாகத்திற்கு நிலம் உரிமை மாற்றம் செய்ய வேண்டி முதுநிலை கோட்டப் பொறியாளர்/ தெற்கு , தெற்கு இரயில்வே, மதுரை அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. **(**கடிதம் எண். u/w 271 Land Acquisition / T.N. dated 10-11-2009)<br><br>மேலும் மேலூர் இரயில்வே நிலையத்தினை இடமாற்றம் செய்வதற்கு வேண்டியுள்ள 3400 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடம் நகரளவு ஆவணங்களின்படி மாநகராட்சி பராமரிப்பில் நிலையில் உள்ள திட்ட சாலையாக உள்ளது. மேற்படி சாலை தற்போது போக்குவரத்து மற்றும் பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் பிரதான உபயோக சாலையாக உள்ளது. மேலும் பொது உபயோக இடம், பூங்கா, விளையாடுமிடம் ஆகியவற்றை அந்தந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்றும், வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது என சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்கள் W.A. 156/2000 & 45/2003 ன் தீர்ப்பு நாள் **12.4.2007**ல் உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே இரயில்வே நிர்வாகம் கோரியுள்ள **3400** சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தினை இரயில்வே நிர்வாகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக, அரசின் பரிசீலனைக்கும் தக்க உத்திரவிற்கும் கருத்துரு அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** இரயில்வே நிர்வாகம் தற்போது மேலூர் ரயில்வே ஸ்டேசன் 2வது கேட் மற்றும்3வது கேட் இடைப்பட்ட பகுதியில் உள்ள காரணத்தினால் போக்குவரத்து | அலுவலகக் குறிப்புப்படி செயல்படத் தீர்மானிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே ரயில்வே நிர்வாகம் தற்போது மேற்கண்ட ஸ்டேசனை புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரில் மாற்றம் செய்ய உத்தேசித்துள்ளது. தற்போது உத்தேசிக்கப்பட்ட இடத்தில் ஸ்டேசன் மாறினால் போக்குவரத்து மிகவும் குறையும். எனவே மேற்க்கண்ட இடத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அரசின் சிறப்பு அனுமதி பெற்று அரசு விதிகளுக்குட்பட்டு ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்கலாம்.<br>எப்1/809/09 | |
| | 20 | தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பீச் ரோட்டில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான ரோச் பூஙகாவில் ரோச் பார்க் வாக்கர்ஸ் கிளப்ஸ் சார்பாக திரு. K.S.P.S ரத்னவேல் அவர்களின் அன்பளிப்பாக எலக்ட்ரானிக் கடிகாரம் அமைக்க ரோச் பார்க் வாக்கர்ஸ் கிளப்ஸ் செயலாளர் மற்றும் தலைவர் அவர்களிடமிருந்து அனுமதி கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது.<br><br>மேற்படி ரோச் பூஙகாவில் திரு K.S.P.S ரத்னவேல் அவர்கள் அன்பளிப்பாக எலக்ட்டிரானிக் கடிகாரம் நன்கொடையாளர் மூலம் அமைப்பதற்கு மாநகராட்சி பொறியர் அவர்களின் கட்டுப்பாட்டில் விதிகளுக்கு உட்பட்டு மேற்படி பணியை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. .<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1/ 21701/2009 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 21 | தூத்துக்குடி மாநகராட்சி வருவாய் பிரிவு சொத்து வரி நிர்ணயம் செய்ததை எதிர்த்து தூத்துக்குடி மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகளுக்கு மாநகராட்சி சார்பாக வாதா அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற வழக்கறிஞர் திரு என். செல்வராஜ் வழக்கறிஞர் அவர்களை கீழ்க்கண்ட வழக்குகளில் ஆஜராக கோரியதையும் மேற்படி வழக்குகளுக்கு கீழ்க்கண்ட விவரப்படி வழக்கறிஞர் கட்டணம் வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | வழக்கு தொடர்ந்தவர் பெயர் | வழக்கு எண் | கட்டணம் |
|---|---|---|---|
| 1 | திரு. பாஸ்கர் | O.S.NO.66/94 | ரூ.2000/– |
| 2 | திரு. பாஸ்கர் | OS.NO.68/94 | ரூ.2000/– |
| 3 | திரு. பத்மநாதன் | O.S.NO.69/94 | ரூ.2000/– |
| 4 | திரு. பத்மநாதன் | OS.NO.70/94 | ரூ.2000/– |
| 5 | திரு. பத்மநாதன் | O.S.NO.77/94 | ரூ.2000/– |
| 6 | திரு. பத்மநாதன் | OS.NO.78/94 | ரூ.2000/– |
| 7 | திரு. பத்மநாதன் | O.S.NO.79/94 | ரூ.2000/– |
| 8 | திரு. ராஜவேல் | OS.NO.71/94 | ரூ.2000/– |
| 9 | திரு.சுகுமார் | O.S.NO.72/94 | ரூ.2000/– |
| 10 | திரு.சுகுமார் | OS.NO.74/94 | ரூ.2000/– |
| 11 | திரு.சுந்தரபாண்டியன் | O.S.NO.73/94 | ரூ.2000/– |
| 12 | திரு.சுந்தரபாண்டியன் | OS.NO.76/94 | ரூ.2000/– |
| 13 | திரு.சுந்தரபாண்டியன் | O.S.NO.80/94 | ரூ.2000/– |
| 14 | திரு.மணியப்பன் மற்றும் பலர் | OS.NO.75/94 | ரூ.2000/– |
| | | | ரூ.28000/– |

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம் அ6/4758/94

| | | | |
|---|---|---|---|
| | 22 | தூத்துக்குடி மாநகராட்சி புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண் 55க்கு 25–11–2009ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுற்கும் வைக்கப்படுகிறது. | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி | வழஙகப்பட்ட |
|---|---|---|
| 1 | திரு.ஆர். பாலசுப்பிரமணியன் | ரூ 1000/– (மாதவாடகை) |

| | | | |
|---|---|---|---|
| | | 135ஏ போல்பேட்டை, தூத்துக்குடி<br>2 திரு.டி. ராஜா 24பி. நந்தகோபாலபுரம் மேற்கு தூத்துக்குடி — ரூ.1075/– (மாதவாடகை)<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண் 55க்கு திரு.டி. ராஜா என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாதவாடகை ரூ 1075/– கொடுத்துள்ளார். மேற்படி கடையினை சுமார் மூன்று ஆண்டுகளாக உரிமம் கோர எவரும் முன்வரவில்லை. எனவே இனிவரும் காலங்களில் நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண். 55க்கு திரு.டி. ராஜா என்பவர் கொடுத்த உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ 1075/– உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16 19825/2009 | |
| | 23 | இம்மாநகராட்சி வார்டு **30** கீழரதவீதி தெருவில் நகரளவு வார்டு **3** பிளாக் **6** நகரளவு எண் **671** மனையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை வழக்கு முடியும் வரை மாநகராட்சி அதிகாரிகள் அகற்ற கூடாது என முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில வாதி திரு.பி.வேல்பாண்டி, த/பெ. பொன்னையா நாடார் கதவு எண் **20/1** கீழரதவீதி, தூத்துக்குடி என்பவர் தூத்துக்குடி மாநகராட்சியை எதிர்த்து வழக்கு O.S.No.445/09 in I.A. No.662/09 மற்றும் I.A.No. 663/09ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1.16777/05 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 24 | இம்மாநகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவில் ஆட்டோ வாகனத்தை வைத்து கொசு புகை மருந்து தெளிக்க மாமன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுப்பதற்காக உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் மூன்று லோடு ஆட்டோ ஓட்டுனர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. திரு. டி.பிரகாஷ், பிரையண்ட் நகர், தூத்துக்குடி என்பவர் குறைந்த விலைப்புள்ளியாக (ஒரு நாள் எரிபொருள் உட்பட) ரூ **445/–**க்கு வழங்கியுள்ளார். குறைந்த விலைப்புள்ளியான ரூ.**445/–**ஐ (ரூபாய் நாநூற்றி நாற்பத்தைந்து மட்டும்) ஏற்று பணி உத்திரவுவழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. திரு.எஸ். மானசே, **26.** ராஜுீவ் நகர், தூத்துக்குடி. ரூ **520/–**<br>2. திரு எஸ். ரத்தீஸ், சின்னமணி நகர், தூத்துக்குடி. ரூ. **475/–**<br>3. திரு.டி. பிரகாஷ் பிரையண்ட் நகர், தூத்துக்குடி ரூ. **445/–**<br><br>**குறிப்பு 1)** மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்பு ள்ளி கொடுத்துள்ள திரு டி. பிரகாஷ் பிரையண்ட்நகர் தூத்துக்குடி அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரூ.**445/–** ஏற்கலாம்.<br>**2)**மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அஙகீகரிக்கலாம்.<br>**3)**மேற்கண்ட செலவினத்திற்குரிய தொகை ரூ **40000/–** அனுமதிக்கலாம்.<br>எச்4/20993/2009 | அலுவலகக் குறிப்பு 1 ஏற்கப்பட்டது, அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக்கப்பட்டது |
| | 25 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 78 நாள் 25–5–2009இல் பேருந்து நிறுத்தம், சைக்கிள் நிறுத்தம், சந்தைகள், கட்டண கழிப்பிடம் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து வருடாந்திர குத்தகை இனங்கள் கட்டணம் வசூலிப்பதற்கான உரிமைக்கான குத்தகை கால அளவை 2009–2010ஆம் வருடம் முதல் மூன்று வருடம் நீடித்து வழங்கவும் அதற்கு வருடத்திற்கு முந்தைய | பொருளில் குறிப்பிட்டுள்ள சந்தைகள் மற்றும் சைக்கிள் நிறுத்துமிடங்கள் |

ஆண்டு குத்தகைத் தொகையில் 5% உயர்வு செய்து அவ்வாறாக மூன்று வருடம் மட்டும் குத்தகை கால அளவை நீடித்து வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன் பேரில் கீழ்க்கண்ட பட்டியல்படி கலம் எண் 2இல் கண்டுள்ள வருடாந்திர குத்தகை இனஙகளுக்கு 2009–2010ம் வருடம் உரிமம் வழஙகப்பட்ட கலம் எண் 3இல் கண்டுள்ள உரிமதாரருக்கு கலம் எண் 4இல் கண்டுள்ளபடி 2009–2010ஆம் வருடம் உரிமம் வழஙகப்பட்ட குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து கலம் எண் 5இல் நிர்ணயம் செய்யப்பட்ட 2010–2011ஆம் வருட குத்தகை தொகை அடிப்படையில் நிர்ணயம் செய்து 2ஆம் வருடம் உரிமம் நீடித்து வழஙகவும் மற்றும் மேற்படி தொகையை செலுத்தாத ஏல இனத்திற்கு புதியதாக ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும் அது வகைக்குரிய செலவுத் தொகையை செலவு செய்ய மன்ற அனு மதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | ஏல இனம் | உரிமதாரர் பெயர் மற்றும் முகவரி | 2009–2010ம் வருட ஏலத்தொகை | 5% உயர்வு செய்த |
|---|---|---|---|---|
| 1 | விக்டோரியா தொடர்சாலையில் உள்ள வ.உ.சிதம்பரம் | திரு. கே. சிம்சன் 79ஏ எஸ்.பி.ஜி.கோவில் | 840900/– | 882945/– |
| 2 | எஸ்.எஸ்.தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் | திரு ஆர். சந்திரசேகர் த/பெ.ராமசாமி | 96300/– | 1 01115/– |
| 3 | சிதம்பரநகர் மாநகராட்சி சந்தையில் கட்டணம் | திரு. எஸ். வேலு த/பெ. சஙகரன் 55சி. டுவிபுரம் | 253700/– | 266385/– |
| 4 | கீழரதவீதி தொடர்ச்சி மாநகராட்சி சந்தையில் கட்டணம் | திரு. கே. பாஸ்கர் 1.பொன்னகரம், தூத்துக்குடி. | 85300/– | 89565/– |
| 5 | கோபால்சாமி தெரு மாநகராட்சி சந்தையில் க.ட்ணம் | திரு எஸ். வேல்ராஜ் 34.சேதுராஜா | 92500/– | 97125/– |
